# தமிழ்நாடுஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்
# TAMILNADU TEACHERS EDUCATION UNIVERSITY
(Established under Tamil Nadu Act 33 of 2008)
GangaiammanKoil Street, Karapakkam, Chennai - 600 097.
Phone: 044- 28389026/27 Website: www.tnteu.in


No.TNTEU/R/DR-1/2021/ Date:03.12.2021

**Dr.M. Soundararajan, Ph.D.,**
**REGISTRAR i/c**

**பெறுதல்**

முதல்வர்கள்/செயலர்கள்,
அனைத்து இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள்,
தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்.

**பொருள்:** தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் - ஆட்சிமன்றக்குழு தீர்மானம் - இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள் தங்களது கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள அரசு/அரசுஉதவிப்பெறும்/பிற்படுத்தப்பட்டநலத்துறை/ஆதிதிராவிட பழங்குடியினர் பள்ளிகள் அல்லது தனியார் பள்ளிகளில் குறைந்தபட்சம் ஒரு பள்ளியினை தத்தெடுத்தல் - நிர்வாகங்களுடன் புரிந்துணர்வு (MoU) ஒப்பந்தம் செய்து சம்பந்தப்பட்ட பள்ளியின் கல்விச்சார்ந்த அல்லது நிதிச்சார்ந்த பிற வளர்ச்சிக்கு பங்களிப்பினை வழங்குதல் வேண்டும் - பல்வேறு கல்லூரிகள் இது நாள்வரை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யவில்லை—பல்கலைக்கழகத்தின் சார்பில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளது. தகவல் தெரிவித்தல் - சார்பு.

**பார்வை:** 1.ஆட்சிமன்றக்குழு தீர்மானம்,நாள்:08.10.2021
2.மாண்பமை துணைவேந்தர் அவர்களின் ஆணை,நாள்: 24.11.2021.

*****

மேற்காண் பார்வையில் குறிப்பிட்டள்ளவாறு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றக்குழு கடந்த 07.09.2019 மற்றும் 08.10.2021 அன்று கீழ்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. அதன்படி, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்துடன் இணைவுப்பெற்ற கல்வியியல் கல்லூரிகள் தங்களது கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள அரசு/அரசுஉதவிப்பெறும்/பிற்படுத்தப்பட்டநலத்துறை/ஆதிதிராவிட பழங்குடியின நலத்துறை பள்ளிகள் அல்லது தனியார் பள்ளிகளில் குறைந்தபட்சம் ஒரு பள்ளியினை தத்தெடுத்து, சம்பந்தப்பட்ட பள்ளிநிர்வாகங்களுடன் புரிந்துணர்வு (MoU) ஒப்பந்தம் செய்து அப்பள்ளியின் கல்விச்சார்ந்த அல்லது நிதிச்சார்ந்த பிற வளர்ச்சிக்கு தங்களது பங்களிப்பினை வழங்கி, அப்பள்ளியினை மேம்படுத்திட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து, கல்லூரிகளுக்கு பல முறை சுற்றறிக்கை அனுப்பப்பட்டு, புரிந்துணர்வு (MoU) ஒப்பந்தத்தின் உண்மை நகலை பதிவாளர் அவர்களிடம் சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. இருப்பினும், பல்வேறு கல்லூரிகள் இதுநாள் வரை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்து, பதிவாளர் அவர்களிடம் (MoU)-யினை சமர்ப்பிக்கவில்லை.

எனவே, அவ்வாறு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யாத கல்லூரிகளை மாவட்ட அளவில் கண்டறிந்து, பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழு தீர்மானத்தினை முழுமையாக கீழ் குறிப்பிட்ட வழிகாட்டு நெறிமுகைளை பின்பற்றி புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செய்வதற்கு மேற்காண் பார்வை 2-இல் குறிப்பிட்டுள்ளவாறு, பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களை மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் உள்ள அனைத்து இணைவுப்பெற்ற (அரசு / அரசு உதவிப்பெறும் மற்றும் சுயநிதி) கல்லூரி முதல்வர்கள் /செயலர்கள் கீழ் குறிப்பிட்ட வழி முறைகளை பின்பற்றி புரிந்துணர்வு **(MoU)** ஒப்பந்தத்தை செய்வதற்கு உறுதுணையாக இருந்து, அதன் உண்மைநகலை பெற்று, பதிவாளர் அவர்களிடம் வருகின்ற 21.12.2021-க்குள் சமர்ப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

பதிவாளர் (பொ)

# புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU)செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

1. புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழக அரசின் 100 ரூபாய் பதிவு முத்திரைதாளில் தட்டச்சு செய்யப்பட்டு, செய்திட வேண்டும்.

2. அரசு/அரசுஉதவிப்பெறும்/பிற்படுத்தப்பட்டநலத்துறை/ஆதிதிராவிடபழங்குடியின நலத்துறை பள்ளிகள் அல்லது தனியார் பள்ளிகளில் குறைந்த பட்சம் ஒரு பள்ளியினை தத்தெடுத்து, சம்பந்தப்பட்ட பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பள்ளியின் நிர்வாகி அவர்களின் ஒப்புதல் கையொப்பம் பெறுதல் வேண்டும்.

3. கல்வியியல் கல்லூரி நிர்வாகத்தால் பள்ளியில் மேற்கொள்ளப்படும் பணிகள்/செயல்பாடுகள் குறித்து விரிவாக குறிப்பிடப்பட்டு, கல்லூரி நிர்வாகி அல்லது கல்லூரி முதல்வர் கையொப்பம் இடுதல் வேண்டும்

4. புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் பள்ளியின் தலைமை ஆசிரியர் அல்லது பள்ளியின் நிர்வாகி அவர்களின் ஒப்புதல் கையொப்பம், கல்லூரி நிர்வாகி அல்லது கல்லூரி முதல்வர் கையொப்பம், பல்கலைக்கழக MoU இயக்குநர், முனைவர்.சா.மணி, பல்கலைக்கழக பதிவாளர் மற்றும் பல்கலைக்கழக மாவட்ட MoU ஒருங்கிணைப்பாளர்கள் ஆகிய ஐந்து நபர்களும் கையொப்பம் இடுதல் வேண்டும்.

5. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் உண்மை நகலை Original MoU–யினை பெற்று பதிவாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

இணைப்பு: 1. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பட்டியல்.

2. மாதிரி (MoU) படிவம்.

## ***DISTRICT LEVEL MoU-COORDINATORS***

| S.No | Name of the District | Name of the Staff Member | Designation | Contact No |
|---|---|---|---|---|
| 1 | Ariyalur | Dr.D.P.Saravanan | AP | 9585830670 |
| 2 | Chennai | Dr.K.Vijaya | AP | 9500114575 |
| 3 | Coimbatore/Nilagiri | Dr.U.Pandian | AP | 9952143273 |
| 4 | Cuddalore | Thiru.S.Balamurugan | AP | 9444859784 |
| 5 | Dharmapuri | Dr.R.Senthilkumar | AP | 9791444758 |
| 6 | Dindiugul | Dr.K.Ratheeswari | AP | 9043870863 |
| 7 | Erode/Tirupur | Dr.A.Magalingam | AP | 7550272611 |
| 8 | Karur | Dr.A.Rajeswari | AP | 9843262699 |
| 9 | Kanchipuram | Dr.K.Devisri | AP | 9566077661 |
| 10 | Kanyakumari | Dr.B.Vijayakumar | DR | 9994265980 |
| | | Dr.P.N.Lakshmi Shanmugam | AP | 9543478097 |
| 11 | Krishnagiri | Dr.V.Vasudevan | AP | 9994115486 |
| 12 | Madurai | Dr.M.Senthilkumaran | AP | 9842249213 |
| | | Mr.L.Visnuram | AR | 9894708850 |
| 13 | Nagappattinam | Thiru.P.Jaganathan | AP | 9952260176 |
| 14 | Namakkal | Dr.M.Muthamizhselvan | AP | 9047407525 |
| 15 | Perambalur | Dr.D.P.Saravanan | AP | 9585830670 |
| 16 | Pudukkottai | Dr.C.E.Jayanthi | AP | 9498059548 |
| 17 | Ramanathapuram | Dr.R.Boopathi | AP | 9842485648 |
| 18 | Salem | Dr.K.Rajasekaran | Asso Prof | 9715817195 |
| 19 | Sivagangai | Dr.R.Boopathi | AP | 9842485648 |
| 20 | Thanjure | Thiru.V.Vijayakumar | AP | 8098558055 |
| 21 | Theni | Dr.L.George Stephen | AP | 9442300951 |
| 22 | Thiruvallur | Dr.V.Sharmila | AP | 9486228569 |
| 23 | Thiruvarur | Dr.T.Sivasakthi Rajammal | AP | 9486875805 |
| 24 | Thotthugudi | Dr.P.Subramanian | AP | 9791696163 |
| 25 | Tirunelveli | Dr.P.N.Lakshmi Shanmugam | AP | 9543478097 |
| 26 | Trichy | Dr.R.Rajalakshmi | AP | 9786500262 |
| 27 | Thiruvannamalai | Dr.M.Kanmani | Asso Prof | 8608490004 |
| 28 | Vellore | Dr.T.M.Gnanasoundari | AP | 9444667218<br>9952489776 |
| 29 | Villuppuram | Dr.K.Mohan | DR | 9894187728 |
| | | Mr.S.Durairaj | AR | 9976225643 |
| 30 | Virudhunagar | Dr.P.C.Nagasubramani | Asso Prof | 9443431594 |

# MoU மாதிரிப்படிவம்

……………….வருடம் ……………..மாதம் ……………….நாள் இன்றையதேதியில் தமிழ்நாடுஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தில் இணைவுப்பெற்று……………….மாவட்டம் ……………….பகுதியில் இயங்கிவரும் ……………..கல்வியியல் கல்லூரியின் நிர்வாகி/முதல்வர் ஆகியநான் (நபர் -1) ……………….மாவட்டம் ……………….பகுதியில் இயங்கிவரும் அரசு/அரசுஉதவிப்பெறும்/பிற்பட்டநலத்துறை/ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை/…………………….. (தனியார்) பள்ளியின் நிர்வாகி/முதல்வராகியநான் (நபர் -2)

ஆகிய நாம் இருவரும் ஒரு மனதாக இணைந்து ஏற்படுத்திக் கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் யாதெனில், தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக ஆட்சிமன்றக்குழுவின் தீர்மானத்தின் படி, இச்சமுதாய முன்னேற்றத்திற்காகவும், இப்பள்ளியில் பயிலும் மாணாக்கர்களின் கல்விச்சார்ந்த, பணிபுரியும் ஆசிரியர்களின் திறன் சார்ந்த மற்றும் பிற வளர்ச்சி சார்ந்த முன்னேற்றத்திற்காகவும், கீழ்க் குறிப்பிட்ட செயல்பாடுகளை 1-ம் நபரின் கல்லூரியின் சார்பாக செய்வதென ஒப்புக்கொண்டு, அதற்கு 2-ம் நபரின் பள்ளியின் சார்பில் முழு ஒத்துழைப்பினை முழு மனதுடன் வழங்குவதாக உறுதி அளித்து, இந்த ஒப்பந்தம் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்த இயக்குநர் மற்றும் பல்கலைக்கழக மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முன்னிலையில் செய்துக்கொள்ளப்படுகிறது.

## செயல்பாடுகள் விபரம்

1.
2.
3.
4………………..etc.

Signature of the School HM/Secretary

Signature of the College Principal/Secretary

Signature of the MoU Director

Signature of the District Coordinator

Signature of the Registrar